# வலயக்கல்வி அலுவலகம் - வலிகாமம்

தரம் 6

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2019

## நாடகமும் அரங்கியலும்

நேரம் 2 மணி

சுட்டெண் -

### பகுதி I

**I. பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து கீறிட்ட இடம் நிரப்புக.**

வகிபாகம், போலச் செய்தல், கற்பனை, வேடமுகம், அசைவு

1) வாழ்வினை வெளிப்படுத்த......................................................................பயன்படும்.

2) கதை புனைவதற்கு......................................................................அவசியமாகும்.

3) ஆங்கீக அபிநயத்திற்குள்......................................................................உள்ளடக்கப்படும்.

4) பாத்திரத்தினை......................................................................என்பர்.

5) பாத்திரத்தினை இனங்காண்பதற்கு......................................................................உதவும்.

(5x2=10 புள்ளிகள்)

**II. பொருத்தமான விடையின் கீழ் கீறிடுக.**

6) சி. ஜெயசங்கர் எழுதிய நாடகம் யாது?
1. பிள்ளை அழுத கண்ணீர் 2. நட்பு 3. தப்பி வந்த தாடி ஆடு

7) நாடகம் என்றால் என்ன?
1. கலை வடிவம் 2. சடங்கு 3. வாழ்வு

8) தெனாலிராமன் கதை எந்த வகையான கதை?
1. நாட்டார் கதை 2. சமயக்கதை 3. வரலாற்றுக்கதை

9) அரசன் பாத்திரத்தின் குரல் எவ்வாறு அமையும்?
1. தளர்வாக 2. கம்பீரமாக 3. பயமுறுத்துவதாக

10) ஆடலில் ஈடுபடுவதன் மூலம் ஏற்படுவது?
1. இளமை 2. வீரம் 3. மகிழ்ச்சி

(5x2=10 புள்ளிகள்)

**III. கூற்று சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

11) நடிகன் உடலைப்பயன்படுத்தி ஊமத்தினைச் சித்திரிக்கலாம் ( )

12) தனியாகவும் கூட்டாகவும் புதிதளித்தலை மேற்கொள்ள முடியும். ( )

13) காவடி ஒரு நாட்டார் ஆடல் வகையாகும். ( )

14) காத்தவராயன் சிந்து நடைக்கூத்து ஒரு பாரம்பரிய அரங்காகும். ( )

15) வேடமுகம் ஒன்றில் உணர்வுகள் மாறிமாறிச் செல்லும். ( )

(5x2=10 புள்ளிகள்)



kalvi.lk

**குறுவிடை தருக.**

16) "காட்டிலை காத்து கடுமையா வீசுது" என்ற பாடலுக்குரிய காட்சியமைப்பு யாது?

........................................................................................................................................................

17) "மச்சம் தின்னும் சிங்கம் நான்" என்ற பாடல் எந்த வகையான நாடகத்தில் இடம்பெறும்?

........................................................................................................................................................

18) கும்மியில் காணப்படும் இரண்டு அம்சங்களைத் தருக.

........................................................................................................................................................

19) நாடகத்தினை ரசிப்பவர்களை எவ்வாறு அழைப்பார்கள்?

........................................................................................................................................................

20) பொருளைப் பயன்படுத்தி ஒரு நிகழ்வினைத் திடீரென நிகழ்த்திக் காட்டும் செயற்பாடு எவ்வாறு அழைக்கப்படும்?

........................................................................................................................................................

(5X2=10 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

1) விரும்பிய மூன்று வினாக்களைத் தெரிவு செய்து அதன் பகுதிகளுக்கு விடை தருக.

1. அரங்க விளையாட்டுக்கள் நான்கு தருக.

2. அரங்க விளையாட்டுக்கள் விளையாடுவதனால் ஏற்படும் நன்மைகள் நான்கு தருக.

3. வகுப்பறைக்கு வெளியே விளையாடும் அரங்க விளையாட்டு ஒன்றினைக் குறிப்பிட்டு, அது விளையாடப்படும் முறையினை விளக்குக.

(5+5+10=20 புள்ளிகள்)

2) 1. நடிகனின் கற்பனையினை வளர்த்தெடுப்பதற்கு உதவும் செயற்பாடு ஒன்று தருக.

2. கதை ஒன்றில் இடம்பெறும் அம்சங்களைத் தருக.

3. சிறுவர் நாடக எழுத்துருவில் இடம் பெறும் அம்சங்களைத் தருக.

4. நீர் பார்த்த சிறுவர் நாடகம் அல்லது வாசித்த சிறுவர் நாடகம் தொடர்பான உமது கருத்துக்களைத் தருக.

(3+4+6+7=20 புள்ளிகள்)

3) 1. "பிள்ளை அழுத கண்ணீர்" நாடகம் எந்த வகை நாடகம் ஆகும்?

2. "பிள்ளை அழுத கண்ணீர்" நாடகத்தில் ஒரு பாத்திரத்தினைத் தெரிவு செய்து, அதன் இயல்புகள் மூன்று எழுதுக.

3. 'பிள்ளை அழுத கண்ணீர்' நாடகத்தில் வரும் காட்சி ஒன்றினைக் குறிப்பிட்டு அந்தக்காட்சியில் காணப்படும் நாடகப் பண்புகளைக் குறிப்பிடுக.

(5+7+8=20 புள்ளிகள்)

4) 1. உமது பிரதேசத்தில் நிகழ்த்தப்படும் நாட்டார் விளையாட்டுக்கள் இரண்டு தருக.

2. நாட்டார் கதைகள் இரண்டின் பெயர்களைத் தருக.

3. பழமொழிகள் இரண்டு தருக.

4. கிராமத்தில் நிகழ்த்தப்படும் ஆடல்கள் மூன்று தருக.

5. நாட்டார் பாடல் ஒன்று எழுதுக அல்லது நாட்டார் கதை ஒன்றினை முழுமையாக எழுதுக?

(3+3+3+3+8=20 புள்ளிகள்)

5) "உண்மை வாழ வைக்கும்" எனும் பெயரில் ஒரு எழுத்துருவினை எழுதுக. (20 புள்ளிகள்)



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான**
**மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில**
**மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457